மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டத்தின் மதிப்பீடு 40 ஆயிரம் என்று போடப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளரின் அனுமதியைப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

சேக்கனூர் ஏரி

*255 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வடார்க்காடு மாவட்டத்தில், வேலூர் தாலுக்காவைச் சார்ந்த சேக்க னூர் ஏரி எப்பொழுது பழுது பார்க்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேக்கனூர் ஏரி 1961-62ம் ஆண்டில் பழுது பார்க்கப்பட்டது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : 1961–62-ஆம் ஆண்டிற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் என் அந்த ஏரி பழுதுபார்க்கப் படவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப் பழுது பார்க்கும் திட்டத்திற்கு 20 ஆயிரம் மதிப்பீட்டில் ஒரு செயற் குறிப்பு ஆட்சித் தலைவ ரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

குறளகத்தில் உள்ள அங்காடி

*256 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை குறளகத்தில் இயங்கும் கதர்-கிராமக் கைத்தொழில் அங்காடி இலாபத்தில் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், 1971-72-ம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். 1969-70-லும் லாபம் வந்திருக்கிறது. 1970-71–லும்லாபம் வந்திருக்கிறது.

(இ) 1971-72–இல் விற்பனையான பொருள்களின் மதிப்பு ரூ. 44 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : 1971-72-ஆம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்புக்கு ஏற்ப நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மொத்த லாப வருமானம் எவ்வளவு ? இப்படி வருமானம் வரக்கூடிய இந்தத் துறையை விஸ்தரிக்க செயற் குறிப்பு இருக்கிறதா ?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : 1969-70-ல் லாபம் வந்திருக்கிறது. 1970-71-க்கும் ரூ. 25 ஆயிரம் லாபம் வந்திருக்கிறது. 1971-72 ஆம் ஆண்டு வருமானம் என்ன என்று தணிக்கை செய்யப்படவில்லை. சென்ற ஆண்டைவிட லாபம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திலாவது மாண்புமிகு உறுப்பினர்கள் இடம் மாறி உட்காரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பெயர் கூப்பிடும்போது அவரவர்கள் இடத்தில் இருந்தால் நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கதர் கிராமக் கைத்தொழில் அங்காடி குறளகத்தில்தான் இயங்குகிறது. அது அவர்களது சொந்தக் கட்டடம். அந்தக் கட்டடத்தில் இதர காரியாலயங்களும் இருப்பதால் அவற்றின் மூலம் வரக்கூடிய வாடகையையும் சேர்த்து இந்த லாபம் கணக்கிடப்பட்டிருக்கிறதா? அல்லது கதர் கிராமக் கைத்தொழில் அங்காடியில் விற்பனையான பொருள்களினுல் மட்டும் கிடைத்திருக்கக்கூடிய லாபமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த வினு அங்காடியைப் பற்றியது. அங்கே விற்பனையாகிற பொருளைப் பற்றியது, கட்டடத்தைப் பற்றியது அல்ல.

THIRU K. M. SUBRAMANIAM : Is the rent included in the assessment of profit ?

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister has already given the answer.

THE HON. THIRU SI. PA. ADITANAR : I do not have the details as to how this profit is worked out, but I believe according to the proper method of accounting, the rent would have been accounted for, separately.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி பல்வேறு மாவட்டங்களில் உற்பத்தியாகிற பொருள்களைக் குறளகத்திற்குக் கொண்டுவந்துதான் விற்பனை செய்வதன் மூலமே லாபம் கிடைக்கிறது என்று அமைச்சர் சொன்னுர்கள். இதுபோன்ற அமைப்புகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இருநூறுக்கும் மேற்பட்ட எம்போரியங்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்